

தமிழ் இலக்கிய மன்றம்

# NTU TLS

# சாரல்

2022/23 EDITION 1

# பொருளடக்கம்

*Contents*


| | பக்கம் |
|---|---|
| **1. 2022 நிகழ்வுகள்** | |
| அ. தேர்தல் மற்றும் வருடாந்திரப் பொதுக்கூட்டம் | 3-7 |
| ஆ. வாங்கப் பழகலாம் | 8-11 |
| இ. பொதுக்கூட்டம் 1 மற்றும் 2 | 12-15 |
| ஈ. நன்யாங் காவனி | 16-20 |
| உ. விடுகதை | 21-25 |
| **2. குழு செயற்பாடுகள்** | 26-33 |
| **3. பிற அங்கங்கள்** | |
| அ. திரை விமர்சனம் | 34-38 |
| ஆ. இளமை குரல் | 39-43 |
| இ. சிரித்து வாழ்ந்திடு | 44-45 |
| ஈ. கவிதையின் அழகு | 46-47 |
| உ. தமிழ் இலக்கியமும் வாழ்வின் வழிகாட்டியும் | 48-52 |
| ஊ. கல்லூரியிலுள்ள உணவு விமர்சனங்கள் | 53-55 |
| எ. ஆதரவாளருக்கு நன்றி | 56-58 |


தேர்தல் X
வருடாந்திர பொதுக்கூட்டம்

# தேர்தல் X
# வருடாந்திர பொதுக்கூட்டம்

## 13வது தலைமைக்குழு தேர்தல்

புதிய அத்தியாயத்தின் தொடக்கமாக 13-ஆம் தலைமைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் திட்டங்களையும் வளர்ச்சியையும் மேற்பார்வையிடுவதற்குத் தலைவரைத் தேர்வு செய்யும் தினமாக 6 ஆகஸ்ட் 2022 அமைந்தது. இக்கணத்தில், 13ஆம் தலைமைக்குழுவிற்கு நியமிக்கப்பட்டவர்களின் தலைமைத்துவப் பயணம் வெற்றிகரமாக அமைய நம் NTU தமிழ் இலக்கிய மன்றம் வாழ்த்துகின்றது !

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு."



என்பதற்கேற்ப புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நம் தலைமைக்குழு உறுப்பினர்கள் மிகுந்தத் தகுதி வாய்ந்தவர்களே! மன்றத்தின் நிர்வாகப் பொறுப்பினை ஒப்படைக்கும் 12வது தலைமைக்குழு மற்றும் அதனை ஏற்கும் 13வது தலைமைக்குழுவின் விவரங்கள் இதோ உங்கள் பார்வைக்கு!

### “ 12 வது தலைமைக்குழு

PRESIDENT: MRIDULA KUMAR
VICE-PRESIDENT: RAJU SANGARI
HONORARY GENERAL SECRETARY: PARTHAN MURALIDHARAN
HONORARY TREASURER: RAMESH KUMAR DAKSANA
CHIEF EDITOR: PRAVENISHA D/O VISWAMBHARAN

outgoing 12th EXCO ”

### “ 13 வது தலைமைக்குழு

PRESIDENT: SRI VAISHNAVI
VICE-PRESIDENT: JANARTHANAN SRI SANJANA
HONORARY GENERAL SECRETARY: SHAYANTHAVIY SIVASANKAR
HONORARY TREASURER: BABU RISHE
CHIEF EDITOR: SARVANANAN KIRTHIKA

incoming 13th EXCO ”

# வருடாந்திர பொதுக்கூட்டம்:

NTU தமிழ் இலக்கிய மன்றத்தின் வருடாந்திர பொது கூட்டம் 3 செப்டம்பர் 2022 அன்று நடைபெற்றது. முதலாவதாக, 13ஆம் செயற்குழுவின் பொருளாளர் Daksana கடந்த ஆண்டின் நிதி அறிக்கையைப் பகிர்ந்துகொண்டார்.

பின்பு 12ஆம் தலைமைக்குழு, 13ஆம் தலைமைக்குழுவிடம் தங்களது கடமைகளை ஒப்படைத்து அவர்களிடம் வாழ்த்துகளையும் கூறினர். மேலும், Mridula 13ஆம் தலைமைக்குழு மாணவர் ஆலோசகராக நியமிக்கப்பட்டார். அதை தொடர்ந்து வரவிருக்கும் ஆண்டின் குழு அமைப்பை 13ஆம் செயற்குழுவின் செயலாளர் Shayanthaviy பகிர்ந்துகொண்டார்.

13ஆம் செயற்குழுவின் தலைவர் Sri Vaishnavi அவரின் பொறுப்பு ஏற்புரையை ஆற்றினார். பின்னர், வரவிருக்கும் ஆண்டின் வேலைத் திட்டத்தைத் தலைவர் Sri Vaishnavi மற்றும் துணை தலைவர் Sanjana பகிர்ந்துகொண்டனர்.

கடந்த ஆண்டில் தமிழ் இலக்கிய மன்றத்திற்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்ட பின்பு சான்றிதழ் அளிக்கும் விழா தொடங்கியது.

நம் தமிழ் இலக்கிய மன்றத்தின் பிரிவுகளில் தலைமை பொறுப்புகளை வகித்த நபர்கள் விருது பெற்றனர். பின்தொடரும் பட்டியலின் வாரியாக விருதுகள் வழங்கப்பட்டன



# விருது பெற்ற நபர்கள்:

வணிக பொறுப்பாளர் : Pritika Nandakumar

பொதுநல பொறுப்பாளர் : Preethi Renganathan

தளவாடங்கள் மற்றும் செயல்பாட்டு பொறுப்பாளர் : Mohammad Shajith

வடிவமைப்பு பொறுப்பாளர் : T Rajnivas

ஊடக பொறுப்பாளர் : Renganathan Madhumitha

வெளியீடுகள் பொறுப்பாளர் : Karunanithi Seetha

கலாச்சார விவகார பொறுப்பாளர் : Y Karthikeswaran

தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொடர்பு பொறுப்பாளர் : Sri Vaishnavi

இசைப்பிரிவு பொறுப்பாளர் : Gnanadas Hamsavathanan and Maria Immaculate

நாடகப்பிரிவு பொறுப்பாளர் : Vishal Vijay and Rajesh Kumar Mritenya

நடனப்பிரிவு பொறுப்பாளர் : Shayanthaviy Sivasankar

எழுத்தாளர் பிரிவு பொறுப்பாளர் : Saravanan Kirthika and Balasubramanium Sahana

தொழில்நுட்பப் பிரிவு பொறுப்பாளர் : Babu Rishe



தலைமைத்துவ விருதைத் தொடர்ந்து சேவை விருதுகள் அளிக்கப்பட்டன. மூன்று வருடங்களாக மன்றத்துக்குச் சேவை ஆற்றிய நபர்களுக்கு கரிகால சோழன் விருது வழங்கப்பட்டது. நான்கு வருடங்களாக மன்றத்துக்குத் தன் சேவையை வழங்கியவருக்கு, திராவிடன் விருது அளிக்கப்பட்டது. மேலும், இலக்கிய விருதும் மகாகவி பாரதி சேவை விருதும் அன்று வழங்கப்பட்டன.

கரிகால சோழன் விருது

Moshik Seetloo
Selvaraju Tarini Priya
Ramanathan Rajaraj
Mathinivedha d/o Neviliappan
Raju Sangari
Parthan Muralidharan
Pravenisha d/o Viswambharan
Y Karthikeswaran

திராவிடன் விருது:

Gnanadas Hamsavathanan

இலக்கிய விருது:

Karunanithi Seetha

மகாகவி பாரதி சேவை விருது:

Selvaraju Tarini Priya

இந்த வருடாந்திர கூட்டம் ஒரு சிறிய விளையாட்டுப் பகுதியோடும் புகைபட நிகழ்வோடும் நிறைவுபெற்றது.

-Yasothai and Ranitha





## ELECTIONS X
## ANNUAL GENERAL MEETING


VAANGA
PAZHAGALAM
வாங்க பழகலாம்!

# VAANGA PAZHAGALAM

NTU தமிழ் இலக்கிய மன்றத்தின் 13 ஆம் செயற்குழு, 27 ஆகஸ்ட் 2022 அன்று வாங்க பழகலாம் என்ற ஒரு அறிமுக நிகழ்வை நடத்தியது. ஒரு நாள் முழுதும் நடைபெற்ற அந்நிகழ்ச்சியில் நூற்றுக்கணக்கானோர் மிகவும் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.



பல்வேறு அணிகளாக பிரிக்கப்பட்டு, சிலப்பதிகார கதையை மையமாக வைத்து பல விளையாட்டுகள் நடத்தப்பட்டன. வெற்றி பெற்ற அணிகளுக்கு இறுதியில் பரிசுகள் வழங்கப்பட்டன. அதுமட்டுமல்லாமல், தமிழ் இலக்கிய மன்றத்தில் உள்ள பல்வேறு குழுக்கள் பற்றிய தகவல்கள் பகிரப்பட்டன.



# VAANGA PAZHAGALAM










நிகழ்ச்சியின் சில நாட்களுக்கு முன்பு கலந்துக்கொண்டவர்களுக்கு நிகழ்ச்சியின் கருப்பொருள் குறித்தான தடயங்கள் அனுப்பப்பட்டன. இதன்மூலம், நிகழ்ச்சியின் கருப்பொருள் என்னவென்ற விறுவிறுப்பு கலந்துக்கொண்டவர்கள் மத்தியில் ஏற்பட்டது. இருப்பினும், நிகழ்ச்சியின் கருப்பொருளான "சிலப்பதிகாரம்" நிகழ்ச்சியின் தினத்தில் தான் அறிவிக்கப்பட்டது.





## சிலப்பதிகாரம்

# VAANGA PAZHAGALAM

நிகழ்ச்சியின் முடிவில் 13 ஆம் குழுவின் முதன்மை மற்றும் துணைக் குழு உறுப்பினராகச் (MAIN COMM AND SUBCOMM MEMBER) சேர்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டது. இதன் மூலம் புதிய நபர்கள் ஒருவருக்கு ஒருவர் அறிமுகம் செய்து கொள்ளவும், தமிழ் இலக்கிய மன்றம் பற்றி தெரிந்துகொள்ளவும் ஏதுவாக இருந்தது.

-Neshiha



# General Meetings

## பொதுக்கூட்டம் 1 மற்றும் 2

# பொதுக்கூட்டம் 1

## GENERAL MEETING 1





NTU தமிழ் இலக்கிய மன்றத்தின் 13 ஆம் குழுவின் முதல் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்த ஆண்டின் முக்கிய நிகழ்வுகளுக்கான கால அட்டவணை அறிவிக்கப்பட்டது. மேலும், செப்டெம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் பிறந்தநாள் கொண்டாடும் நபர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன. நலன் பராமரிப்பு மற்றும் தளவாடங்கள் குழு (WELOGS COMMITTEE) சிறுசிறு விளையாட்டுகளை நடத்தி அனைவரையும் உற்சாகமாக்கினர். இதன்மூலம் இந்தப் பொதுக்கூட்டம் நம் உறுப்பினர்களுக்கு ஓர் உற்சாக வரவேற்பை அளித்தது.

-Neshiha



# பொதுக்கூட்டம் 2

## GENERAL MEETING 2




வெவ்வேறு துணைக்குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுக்கள் இவ்விளையாட்டிற்காக உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு திரைப்படக் காட்சி கொடுக்கப்பட்டது. அதனை அவர்கள் பாணியில் நடித்துக் காட்ட வேண்டும்.

நிர்வாக விஷயங்களைப் பற்றி மட்டும் பேசவா பொதுக்கூட்டம் இருக்க வேண்டும்? அது ஏன் குதூகலமானதாக இருக்கக்கூடாது? அவ்வாறு நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டம்தான் அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம். நமது மன்றத்தில் இருக்கும் உறுப்பினர்களிடையே உள்ள ஒற்றுமையை மேம்படுத்தும் விதமாகப் பற்பல விளையாட்டுகள் வடிவமைக்கப்பட்டிருந்தன.



# பொதுக்கூட்டம் 2

GENERAL MEETING 2




இந்த விளையாட்டுகளை அனைவரும் சவாலாக எடுத்துக்கொண்டு தங்களின் நடிப்புத்திறனை வெளிக்காட்டினர் நம் உறுப்பினர்கள். நம்மை வயிறுக் குலுங்க சிரிக்க வைத்ததுடன், தங்களின் படைப்பாற்றலால் வியக்கவும் வைத்தனர். இதன்மூலம் வெவ்வேறு உறுப்பினர்களுக்கிடையே நல்ல நட்பு ஏற்பட்டது.

அதைத் தொடர்ந்து தீபாவளியைப் பற்றிய ஒரு சிறிய வினாடி வினா அங்கத்தில் பங்குபெற்றனர் நமது உறுப்பினர்கள். இதன்மூலம், தீபாவளி பண்டிகை பற்றிய அரிய தகவல்களைக் கற்றனர்.

பொதுக்கூட்டம் என்றால் தகவல்களைப் பகிரும் இடமாக மட்டும் இல்லாமல், மற்ற உறுப்பினர்களுடன் நேரத்தை செலவழிக்கும் ஓர் அங்கமாக அமைந்தது சிறப்பாக இருந்தது.

-Chandru





# நன்யாங் காலனி

## BONDING DAY 1: HALLOWEEN

# நன்யாங் காலனி

## HALLOWEEN BONDING DAY

மனதை அச்சம் கௌவ, விழிகளில் பீதி நிரம்ப, உடல் திகில் மழையில் நனைய, நம் மெய்யைச் சிலிர்க்க வைக்க வந்திருந்தது "நன்யாங் காலனி". 'ஹலோவின்' (Halloween) பிணைப்பு நாளை முன்னிட்டு, நம் மன்றத்தின், நலன் பராமரிப்பு மற்றும் தளவாடங்கள் குழுவின் (WELOGS Committee) ஏற்பாட்டில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. திகிலூட்டும் உணர்வை ஏற்படுத்த இந்நிகழ்வானது, சந்திரமுகி திரைப்படச் சூழலை மையமாகக் கொண்டு அமைந்திருந்தது.



# நன்யாங் காலனி

## HALLOWEEN BONDING DAY





இதில் பங்கேற்ற பங்கேற்பாளர்கள், குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். ஒவ்வொரு குழுவிற்கும் சந்திரமுகி திரைப்படத்தில் நடித்த கதாபாத்திரங்களான , 'வேட்டைய ராஜா', 'முருகேசன்' முதலிய பெயர்கள் சூட்டப்பட்டன. அனைத்துக் குழுக்களுக்கும் இடையே ஒரு போட்டி ஏற்பாடு செய்யபட்டிருந்தது. அதாவது, 'சிங்கம் சூர்யா', 'நீதிபதி ஜெய்பிம்', 'கோவை சரளா', 'வசூல்ராஜா MBBS', 'துப்பாக்கி ஜெகதீஷ்', 'கங்கா' ஆகிய ஆறு கதாபாத்திரங்கள் ஓர் அறையில் அடைக்கப்பட்டிருந்தனர். அதில் ஐவர் மர்மமான முறையில் கொல்லப்பட்டனர்.

# நன்யாங் காலனி

## HALLOWEEN BONDING DAY

அந்த அறையில் இருந்த ஒருவர் தான் இந்தக் கொலைகளுக்குக் காரணமாக இருந்தார். எனவே, அந்தக் கொலைகாரர் யார் என்பதைக் கண்டுபிடிப்பதுதான் இந்தப் போட்டியின் முக்கிய நோக்கம் ஆகும். இதனை செய்ய ஒவ்வொரு குழுவும், நான்கு சவால்களைக் கடந்து செல்ல வேண்டும். ஒவ்வொரு சவாலிலும் அந்தக் கொலைகாரர் யார் என்பதை மறைமுகமாக குறிக்கும் விதம் சில தடயங்கள் கொடுக்கப்படும். ஆகவே ஒவ்வொரு குழுவிலிருக்கும் போட்டியாளர்கள், தங்களுக்குக் கிடைத்திருக்கும் தடயங்களைக் கொண்டும் தங்களின் மதிநுட்பத்தைப் பயன்படுத்தியும் அந்தக் கொலைக்காரரைக் கண்டுபிடிக்க வேண்டும்.



# நன்யாங் காலனி

## HALLOWEEN BONDING DAY

அவரவர் குழுக்களுக்குள்ளேயே செயல்படக்கூடிய TLS நண்பர்களுக்கு இந்த நிகழ்வின் வாயிலாக வெவ்வேறு குழுக்களில் இருக்கக்கூடியவர்களுடன் பழகும் சூழல் ஏற்பட்டது. இந்த நிகழ்வில் பங்குபெற்ற அனைவரும் யார் அந்தக் கொலைக்காரர் என்று கண்டுபிடிப்பதில் மும்முரமாக இருந்தனர். மேலும் சவால்களின்போது அனைவரும் மிகுந்த உற்சாகத்துடனும் விவேகத்துடனும் செயல்பட்டனர். “ஊர் கூடினால்தான் தேர் இழுக்கமுடியும்”, என்பதுபோல TLS நண்பர்கள் ஒன்றுகூடி மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய நிகழ்வாக இது அமைந்ததால், அவர்களிடையே பிணைப்பு அதிகரித்தது.

-Akash and Nandini





REC
விடுகதை
NTU TLS
MUSIC VIDEO

REC




நம் இந்திய கலாச்சாரம் கொண்டாட்டங்களை மிகுதியாகக் கொண்டுள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது. கொண்டாட்டங்களினால் நம் துக்கங்களை எல்லாம் மறந்து உற்சாகத்துடன் இருக்கமுடியும். இதை அடிப்படையாகக் கொண்டு நமது மன்றத்தின் ஊடகக்குழு ஒரு கொண்டாட்ட இசை காணொளியை உருவாக்கியது.

இந்தக் காணொளி மூன்று அறிமுகம் காணாத 3 நபர்கள் தனித்தனி அறைகளில் இருப்பதிலிருந்து துவங்குகிறது. தங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்று அறியாத இம்மூவர் எப்படியாவது தப்பிக்கவேண்டும் என்ற நோக்கில் தாங்கள் இருந்த அறைகளை விட்டு வெளியேறினர். ஆனால், மர்மமான முறையில் இவர்கள் மூவரும் மூன்று இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

REC

குழப்பத்திலேயே இம்மூவரும் அவர்கள் இருந்த இடங்களில் உலாவி வந்தனர். ஆனால், மூவருக்கும் வெவ்வேறு பொருட்கள் கிடைத்தன. அந்தப் பொருட்களை அவர்கள் எடுத்துக்கொண்ட பிறகு அவர்கள் மூவரும் மர்மமான முறையில் ஒரே இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அந்த இடத்தில் அவர்களுக்கு ஒரு விடுகதை கொடுக்கப்பட்டது. அந்த விடுகதைக்கான பதிலாகத் திகழும் பொருளை அவர்கள் உருவாக்கவேண்டும். ஒருவர் கையில் நூலும், இன்னொருவர் கையில் ஆரஞ்சுப்பழமும், இன்னொருவர் கையில் எண்ணெய் புட்டியும் இருந்தன. இவற்றை வைத்துக்கொண்டு இவர்கள் ஒரு விளக்கை உருவாக்கினர். பின்னர் இவர்கள் இந்த மர்மமான நிலையிலிருந்து வெளியேறினர். பிரம்மாண்டமான ஆட்டம் பாட்டம் கொண்டாட்டத்தோடு காணொளி நிறைவுற்றது.







REC

"ஒன்றுப்பட்டால் உண்டு வாழ்வு" என்று சொல்வார்கள். காணொளியில் இடம்பெற்ற 3 கதாப்பாத்திரங்களும் ஒருவரோடு ஒருவர் சம்பந்தமே கிடையாது. இருந்தும், அந்த மர்மமான சூழலிலிருந்து எப்படியாவது தப்பிக்கவேண்டும் என்ற காரணத்திற்காக அவர்கள் ஒன்றிணைந்து செயல்பட்டனர். எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும் ஒருவரை ஒருவர் அனுசரித்து நடந்துக்கொண்டால் எத்தனை பிரச்சினைகள் வந்தாலும் சமாளிக்கலாம் என்ற ஓர் உன்னத கருத்தை இக்காணொளியின் முடிவு நமக்கு உணர்த்துகிறது.







REC

இந்தக் காணொளிக்காக அயராது பாடுபட்டவர்களின் விவரங்கள் பின்வருமாறு:

ஊடகக்குழு பொறுப்பாளர்:
Hemanth

திட்ட இயக்குனர்கள்:
Madhumitha, Jeevika

புகைபட இயக்குனர்:
Aditya

இயக்குனர்கள்:
Aditya, Muhsin, Murugappan, Ramasamy

படத்தொகுப்பாளர்கள்:
Hemanth, Jeevika, Madhumitha, Aditya, Murugappan, Muhsin, Ramasamy, Visvani

தயாரிப்பு மேற்பார்வையாளர்கள்:
Anjali, Shreenidhi

நடிகர்கள்:
Shruthika, Karthik, Vishal

நடன இயக்குனர்கள்:
Sri Vaishnavi, Madhumitha, Rethika, Shwetha, Nandini

டிரோன் ஒளிப்பதிவாளர்:
Shajith

மற்றும்:
காணொளியில் இடம்பெற்ற நடனக் கலைஞர்கள்
Apex Productions (Saravanan)
TLS வெளியீட்டுக் குழு




-Akash and Nivetha

# குழு செயற்பாடுகள்



# தலைமைக்குழு

## EXCO



எங்களின் பயணம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில். பதவியேற்றதிலிருந்து துவங்கியது. மன்ற குழுக்களின் உருவாக்கத்தை முன்னிட்டு அந்தந்த குழுக்களின் புகைபடங்களும் எடுக்கப்பட்டன. தீபாவளி திருநாள் கொண்டாட்டத்தை மையமாக கொண்டு எங்களின் ஊடகக்குழு சுயமாக ஒரு இசை காணொளி ஒன்றை உருவாக்கினர். எங்களின் மாதாந்திர பொதுக்கூட்டம் ஒன்றில் நடந்த தீபாவளி கொண்டாட்டத்தின்போது பலகாரங்கள் விநியோகிக்கப்பட்டதோடு நலன் பராமரிப்பு மற்றும் தளவாடங்கள் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விளையாட்டுகளையும் விளையாடி மன்றத்தினர் உற்சாகமடைந்தனர். அதே நிகழ்வில் "வீட்டில விசேஷம்" என்ற தலைப்பில் நடந்த "ஏன்ஜல்-மார்டல் (Angel-Mortal)" நிகழ்வில் மன்ற உறுப்பினர்கள் சக உறுப்பினர்களுடன் பரிசுகளை மாற்றிக்கொண்டனர். அத்துடன், ஹாலோவீன் நிகழ்வை ஒட்டி "நன்யாங் காலனி" என்ற ஒரு பிணைப்பு நாள் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இறுதியாக, மன்ற உறுப்பினர்களைக் கடினமான இறுதி தேர்வு நேரத்தில் ஊக்குவிக்கும் வண்ணம் அவர்களுக்கு நல பரிசுகள் வழங்கினோம்.

# நலன் பராமரிப்பு மற்றும் தளவாடங்கள் குழு


## *WELOGS*

இந்த அரையாண்டில் நாங்கள் வெவ்வேறு நிகழ்வுகளுக்குத் திட்டமிட்டு ஏற்பாடு செய்துள்ளோம். “வீட்டுல விசேஷம்” என்ற பரிசுகள் பரிமாற்ற நிகழ்வுக்கு ஏற்பாடு செய்ததன்மூலம் நெளிவு சுளிவு மற்றும் குழுவாகச் செயல்படவேண்டிய அவசியத்தை உணர்ந்துள்ளோம். “நன்யாங் காலனி” என்ற நமது மன்றத்தின் பிணைப்பு நாளை ஏற்பாடு செய்ததன்மூலம் எத்தகைய புதுப்புது பிரச்சினைகள் வந்தாலும் அவற்றைச் சமாளிக்கக்கூடிய திறன் வேண்டும் என்பதைக் கற்றுக்கொண்டோம். ஏறத்தாழ 100 உறுப்பினர்களைக் கொண்ட இந்த மன்றத்தை வைத்து பொதுக்கூட்டங்களை நடத்துவது அத்தனை எளிதல்ல. கலந்துகொள்வோரின் எண்ணிக்கையைப் பொறுத்து ஏற்பாட்டுப்பணிகள் வேறுபடும் என்பதால் நெளிவு சுளிவோடு செயல்படும் சாமர்த்தியத்தை நாங்கள் வளர்த்துக்கொண்டோம். ஆக மொத்தத்தில், இந்த அரையாண்டில் நாம் நிறைய நிகழ்ச்சிகளை நடத்தி உள்ளோம், இதே உத்வேகத்துடனும் உற்சாகத்துடனும் நிகழ்ச்சிகளை நடத்தி இம்மன்றத்தினரைப் பரவசமடையச் செய்திடுவோம்...




# ஊடகக்குழு

## *MEDIA*



இந்த அரையாண்டில் நாங்கள் இசை காணொளி ஒன்றினைத் தயாரித்தோம். அதனை எவ்வாறு தயாரிப்பது என்பது குறித்தான படப்பிடிப்பு மற்றும் தயாரிப்பு உத்திகளைக் கற்றுக்கொள்வதற்காக ஒரு பட்டறையையும் நடத்தினோம். மேலும், இவ்வாண்டிற்கான காணொளி ஒரு மாறுபட்ட கதைக்களத்தைக் கொண்டுள்ளது. இந்தக் காணொளியை உருவாக்கும்போது நாங்கள் ஒருவருக்கொருவர் தோள்கொடுத்து செயல்படவேண்டிய முக்கியத்துவத்தைக் கற்றுணர்ந்தோம். ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட சிந்தனைகளும் கருத்துகளும் உண்டு. அவற்றையெல்லாம் அனுசரித்துப் போகவேண்டும் என்பதை நாங்கள் நன்கு உணர்ந்துள்ளோம். மேலும், இந்தக் காணொளி உருவாக்கத்தின்போது வெவ்வேறு குழுக்களைச் சேர்ந்தவர்களோடு ஒன்றாகப் பயணிக்கும் வாய்ப்பும் கிடைத்தது. இவ்வரையாண்டில் நாம் மன்றத்தினருக்காக புகைபடம் எடுக்கும் நிகழ்வினை ஏற்பாடு செய்தோம். அவரவர் குழுவினரோடு ஒன்றாக இருக்கின்ற புகைபடங்களை நாங்கள் எடுத்தோம். ஆகையால், இந்த அரையாண்டு எங்களுக்கு ஒரு கதம்பமாகவே இருந்தது என சொல்லலாம்.






# வடிவமைப்புக் குழு

## DESIGN

எங்களுடைய முதல் உட்குழு பட்டறையை நடத்தி வடிவமைப்பு மற்றும் கேன்வா (Canva) என்ற இணைய வடிவமைப்புக் கருவியின் அடிப்படைகள் குறித்த அம்சங்களை ஆராய்ந்தோம். எங்களுடைய முதல் திட்டப்பணி என்னவென்றால் நலன் பராமரிப்பு மற்றும் தளவாடங்கள் குழுவோடு இணைந்து “நன்யாங் காலனி” நிகழ்ச்சிக்கான விளம்பர தட்டிகளை வடிவமைத்தோம். வெவ்வேறு சமூக வலைத்தளப் பதிவுகளுக்காகவும் நாங்கள் வடிவமைப்புகளைச் செய்தோம். இதன்மூலம், எங்களுடைய புத்தாக்கத் திறனை எங்களால் மேம்படுத்திக்கொள்ள முடிந்தது. எதிர்காலத்தில், நாங்கள் ஒரு தொழில்முறை வடிவமைப்பாளர் ஒருவரை ஈடுபடுத்தி மற்றொரு பட்டறை ஒன்றினை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். இதன்மூலம், வடிவமைப்பு குறித்தான எங்கள் கற்றல் பயணம் தொடர்கின்றது...





# வணிகக்குழு
## BUSINESS

கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் இவ்வாண்டில் எங்கள் குழுவிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகம். ஆகவே, இதனைக் கருத்திற்கொண்டு நிர்வாக வசதிக்காக வணிகக்குழு நிதியாதரவு கோரும் குழு மற்றும் நிகழ்ச்சிகள் குழு என இரண்டு குழுக்களாகச் செயற்பட்டு வருகிறது. எங்களின் நிதியாதரவு கோரும் குழு தேர்வு நலப் பைக்களுக்கான நிதியாதரவைத் திரட்டியது. எங்களின் நிகழ்ச்சிகள் குழு வெவ்வேறு நிகழ்வுகள் மற்றும் வருடாந்திர மன்றத்தின் வணிகப்பொருட்களுக்கான துவக்கப்பணிகளை மேற்கொண்டு வருகிறது. ஆகவே, இதன்மூலம் எங்களின் ஆக்கப்பூர்வமான சிந்தனைத் திறன் மேம்படுகிறது.





# கலாச்சார நடப்புகள் குழு

## CULTURAL AFFAIRS

இந்த அரையாண்டில் நாங்கள் அனைத்து துணைக்குழுகளுக்கும் பிணைப்பு நிகழ்வுகளை நடத்தியுள்ளோம். மேலும், நடனக் குழு ஊடகக்குழு தயாரித்த இசைக் காணொளிக்காகவும், தொழில்நுட்பக் குழு தொழில்நுட்பம் தொடர்பான பட்டறையையும், இசைக்குழு தங்களின் வழக்கமான நிகழ்ச்சிகளுக்காகவும், எழுத்தாளர் குழு இவ்வரையாண்டிற்கான சஞ்சிகைக்காகவும் பணியாற்றின. எங்களின் செயற்பாடுகளின்மூலம் முன்கூட்டியே பணியாற்றுவது பற்றியும், உறுப்பினர்களிடையிலான ஒருங்கிணைப்பைப் பற்றியும் நாங்கள் கற்றுக்கொண்டோம்.



# வெளியீட்டுக் குழு
## PUBLICATIONS

இந்த அரையாண்டில் நாங்கள் இசைக் காணொளிக்கான திரைக்கதையை உருவாக்கினோம். மேலும், இவ்வரையாண்டிற்கான சஞ்சிகையையும், தமிழ்க் குறித்தான சமூக வலைத்தளப் பதிவுகளுக்கான ஆராய்ச்சிப் பணிகளும் இந்த அரையாண்டில் துவங்கினோம். சஞ்சிகையில் எந்தெந்த அங்கங்கள் இடம்பெறவேண்டும் என்பது குறித்து பல கலந்துரையாடல்கள் நடைபெற்றன.



இதன்மூலம், வெவ்வேறு சிந்தனைகளை அனுசரித்து செல்லவேண்டிய தேவையை நாம் உணர்ந்துள்ளோம். அத்துடன், வருகின்ற அரையாண்டில் மன்றத்தினர் இடையே தமிழ்ப்பற்றை வளர்க்கவும் அவர்கள் தமிழைப்பற்றி கற்றுக்கொள்ளவும் வித்தியாசமான பாணியில் பல்வேறு நிகழ்வுகளை நடத்த உத்தேசித்துள்ளோம். இதன்மூலம், எங்களின் தமிழுக்கான பணிகள் தொடரும்..

-Akash





திரை
விமர்சனம்
கபாலி
AUDIO FROM JAN 28
விசாரணை
STR in achcham yenbadhu madamaiyada
IN THEATERS FROM JUNE 3RD
சேதுபதி
தர்மதுரை
19
இறுதிச்சுற்று
SAALA KHADOOS

# திரை விமர்சனம்

விமர்சனம்: இரட்டை சகோதரர்கள், கதிர் மற்றும் பிரபு (தனுஷின் இரட்டை வேடம்), இளம் வயதில் பிரிக்கப்படுகிறார்கள். தனித்தே வாழ்ந்து வந்த இவர்கள் இருவரின் வாழ்க்கை மறுபடியும் எப்படி இணைகிறது மற்றும் அதன் விளைவுகள் என்ன என்பதே இத்திரைப்படத்தின் மையப்புள்ளியாகும்.

செல்வராகவன் இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படம், ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை எதிர்நோக்கியது. பார்வையாளர்கள் திகில் படங்களைப் பார்ப்பவர்களாக இருந்தால், முதல் பாகத்தின்

GENRE:

திகில்/திரில்லர்




திரைக்கதை மெதுவாக செல்வதைப்போல் தோன்றலாம், அடுத்து நடக்கவிருப்பதையும் எளிதில் கணித்திடலாம். ஆனால், இரண்டாம் பாகம் கதையின் வளர்ச்சியை நன்கு ஆதரிக்கும், இரசிகர்களையும் கவர்ந்திடும்.

தனுஷ் கே ராஜா
செல்வராகவன்
இந்துஜா ரவிச்சந்திரன்

யுவன் ஷங்கர் ராஜாவின் பின்னணி இசை மற்றும் பாடல்கள் இப்படத்தின் பலம் என்றுரைக்கலாம். தனுஷின் இயல்பான நடிப்பு இக்கதையை பார்வையாளர்களிடம் கொண்டு சேர்க்க உதவியது. இப்படத்தை அமானுஷ்யத்திற்காக மட்டும் இல்லாமல் ஒரு உளவியல் சார்ந்த படமாக கருதினால் இது பாராட்டிற்குரிய ஒரு முயற்சி என்றே உரைக்கலாம். இதை இப்போது Amazon Primeல் காணலாம்.




GENRE:

## வன்முறை/ திரில்லர்

விமர்சனம்: தேச துரோகியின் மகன் என்றழைக்கப்படும் விஜய் பிரகாஷ் (கார்த்தி சிவகுமார்), தன்னை நிரூபிப்பதற்காக ஒரு காவல் துறையினராக பணிபுரிகிறார். ஒரு தேசிய முக்கியத்துவம்வாய்ந்த பத்திரம் தொலைவதில் தொடங்கும் கதை, எங்கு சென்று முடிகிறது, இதை விஜயால் தீர்க்க முடியுமா, மற்றும் விஜயின் தந்தை யார் என்பதற்கு விடையளிப்பதே இப்படத்தின் கதை சுருக்கம்.

முதல் அரை மணி நேரம் திரைக்கதை மெதுவாக செல்வதை போல் தோன்றலாம். ஆனால், சர்தார் என்கிற கதாபாத்திரத்தை அறிமுகம் செய்தபின் படம் சூடு பிடிக்க தொடங்கும். இப்படத்தின் ஒளிப்பதிவு மற்றும் திரைக்கதையில் நமக்கு, KGF, கைதி போன்ற படங்களின் சாயல் தெரிகிறது. சண்டை காட்சிகள் நன்றாக எடுக்க பட்டன. கார்த்தி கதாபாத்திரத்திற்கு ஏற்ப பிரமாதமாக நடித்திருக்கிறார்.

ஜி வி பிரகாஷின் இசை இப்படத்திற்கு மேலும் மெருகுகூட்டியது. கதையில் கதாநாயகி இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை, காதல் காட்சிகள் மற்றும் பாடல்கள் கதைக்கு சம்பந்தம் இல்லாமல் இருந்தன. இருப்பினும், மைய கதையையும் சண்டை/ வன்முறை காட்சிகளையும் கருதினால் கட்டாயம் ஒரு முறை பார்க்க வேண்டிய படம் இது.

## கார்த்தி சிவகுமார்
## ராஷி கன்னா
## லைலா
## சங்கி பாண்டேன்

★★★★☆

விமர்சனம்: இந்தியரான அன்பரசன் (சிவகார்த்திகேயன்) ஆங்கிலேயர் ஆன ஜெசிக்காவை (மரியா ரியாபோஷாப்கா) காதலித்ததால் ஏற்படும் பிறச்சனைகளை பார்கலாம். முதலில், அன்பின் தந்தையார், உலகநாதன்(சத்யராஜ்), ஜெசிக்கா பிரெஞ்சுக்காரர் என்று நம்பி அன்பு மற்றும் ஜெசிகாவின் காதலை ஏற்றுகொண்டார்.

GENRE: நகைச்சுவை/காதல்




★★★☆☆

## சிவகார்த்திகேயன்
## மரியா ரியாபோஷாப்கா
## சத்யராஜ்

ஆனால் அவர் உண்மையில் ஆங்கிலேயர் என்று உணர்ந்தபோது, இருவரின் காதலை அவர் ஏற்கவில்லை. உலகந்தனின் தாத்தா மதிப்பிற்குரிய வேலுச்சாமி ஆங்கிலேயர்களால் கொல்லப்பட்டதே இதற்குக் காரணமாகும். இப்படம் அன்பு இந்த பிரச்சனைகளைச் சமாளித்து உலகநாதனை தன் காதலை ஏற்றுக்கொள்ள வைப்பதை பற்றிதான்.

இந்தத் திரைப்படம் ஒரு சிறந்த கருத்தைக் கொண்டிருந்தது. காதல் சாதியையோ, இனத்தையோ கருத்தில் கொள்ளாது. இவற்றை வைத்து ஒருவரின் காதலை ஏற்றுகொள்ளாமல் இருக்க காரணமாக இருக்கக்கூடாது. இந்த கருத்து திரைப்படத்தில் ஒரு இலகுவான மற்றும் நகைச்சுவையான வழியில் பார்வையாளர்களிடம் சேர்க்கப்பட்டது. படத்தில் நகைச்சுவை காட்சிகள் நகைச்சுவையாக இருந்தாலும், பல இடங்களில் அது பொருந்தவில்லை. மேலும், படத்தில் பாடல்கள் நன்றாக இருந்தாலும் அவை தேவையற்றதாக இருந்தன. நகைச்சுவைக் காட்சிகளுக்காகவும், அவர்கள் கொண்டு சேர்க்க முயற்சிக்கும் கருத்துக்காகவும் படத்தை ஒரு முறையாவது பார்க்க வேண்டும்.




GENRE: காதல்

# தனுஷ்
# நித்யா மேனன்
# பாரதிராஜா
# பிரகாஷ் ராஜ்

★★★☆☆

விமர்சனம்: திருச்சிற்றம்பலம் என்கிற பழம் (தனுஷ் கே ராஜா) வாழ்கையில் காதலை தேடி செல்லும் பயணத்தை இப்படம் சித்தரிக்கிறது.பழம், இரண்டு காதல் தோல்விகளுக்கு பிறகு தான், தன்னுடை உயிர் தோழி, சோபனா (நித்யா மேனன்), மீது வைத்திருக்கும் காதலை உணருவான். அதே சமயம், பழத்திற்கும் அவன் தந்தைக்கும் (பிரகாஷ் ராஜ்) உள்ள வலுவற்ற உறவை படத்தில் பார்க்கலாம்.

படத்தின் கதை தனித்தன்மை வாய்ந்ததாக இல்லாவிட்டாலும், படத்திற்காகத் தேர்வு செய்யபட்ட நடிகர்கள் தங்களுடைய பாத்திரங்கள் சிறப்பாக நடித்திருந்தார்கள். இது படத்தின் வெற்றிக்கு ஒரு முக்கிய காரணமாகும். இந்த படத்தில் வரும் பாடல்கள் அனிருத் ரவிச்சந்தர் மற்றும் தனுஷால் இசையமைத்துள்ளன. மூன்று (2012), வேலையில்லா பட்டதாரி (2014), மாரி மற்றும் தங்க மகன் (2015) போன்ற திரைப்படங்களில் இவர்களுடைய பாடல்கள் எவ்வளவு சிறப்பாக இருந்ததோ, அதை போலவே இப்பட பாடல்கள் இளைஞர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன. படத்தின் முடிவு திடீர் என்று தோன்றினாலும், இப்படத்தை ஒரு முறையாவது பார்க்க வேண்டும்.


-Sahana and Shivani


இளமை
குரல்


# இளமை குரல்

இவ்வுலகில் பல அற்புதங்கள் உண்டு. கண்டவுடன் காதலில் விழுவதும் அவ்வற்புதங்களில் ஒன்றே. எவ்வித காரணமுமின்றி எப்படி ஒரு பார்வையில் இரு மனங்களும் ஒன்றாய்க் கலந்துவிடுகிறது? யாருக்கும் புரியாத ஓர் அதிசயம் தான். இந்த அழகிய உறவை சித்தரிக்கும் வண்ணம் "யாயும் ஞாயும்" என்ற சங்க கால கவிதை செம்புலப்பெயனீரார் என்பவரால் இயற்றப்பட்டுள்ளது. இக்கவிதை "சகா" என்ற திரைப்படத்தில் உள்ள ஒரு பாடலின் வரிகளாகவும் பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. நீண்டதாக இல்லையெனினும் இதன் ஒவ்வொரு வரியிலும் ஆழமான அர்த்தங்கள் பதிந்துள்ளன. முதல் பார்வையில் வரும் காதலிலும் கடலளவு ஆழம் உண்டு என்று உணர்த்தும் வகையில் இதன் வரிகள் அமைந்துள்ளன.

இக்கவிதை உருவெடுத்த இடம் குறிஞ்சி மலையாகும். தலைவர் மலையில் உள்ள பூக்களை ரசித்து வலம் வரும்போது, தலைவியைக் கண்டு அவளுடைய சௌந்தர்யத்தில் சொக்கிப்போகிறார். இருவரும் கண்ஜாடையிலேயே காதல் எனும் ஓவியத்தை வரைந்து விட்டனர். இருந்தும், தலைவிக்குத் தலைவனுடைய காதலின் மேல் சந்தேகம் ஏற்படுகிறது. அவர் மீண்டும் தலைவியைத் தேடி அவளை மணமுடிக்க வருவாரா என்ற கேள்வி அவளுடைய மனதைக் குத்திக்கொண்டே இருக்கிறது. இதைப் புரிந்துகொண்ட தலைவர், ஒரே சந்திப்பிலேயே தமது இதயத்தை அவளிடம் பறிகொடுத்துவிட்டார் என்று உணர்த்த "யாயும் ஞாயும்" என்ற கவிதையைப் பாடுகிறார்.



"யாயும் ஞாயும் யாரா கியரோ,
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்,
யானும் நீயும் எவ் வழி அறிதும்,
செம்புல பெயல்நீர் போல்
அன்புடை நெஞ்சம்தாம் கலந்தனவே"



என்பது அதன் வரிகளாகும். இதன் மூலம் கூறப்படுவது என்னவெனில் தலைவரின் பெற்றோருக்கும் தலைவியின் பெற்றோருக்கும் எவ்வித உறவும் இல்லை. இதுவரை தலைவரும் தலைவியும் சந்தித்துக்கொண்டதும் இல்லை. அப்படி இருந்தும் மழை நீர் செம்மண்ணைத் தொட்டவுடன் எப்படி ஒன்றாக கலந்துவிடுகிறதோ, அதை போல் தலைவியை பார்த்த முதல் கணத்திலேயே தலைவரின் உள்ளத்தில் கலந்துவிட்டதாகச் செம்புலப்பெயனீரார் எழுதியுள்ளார்.

மழை நீர் செம்மண்ணோடு கலக்க ஒரு நொடி போதும். ஆனாலும் இரண்டும் கலந்த பின் ஒன்றில் இருந்து மற்றொன்றை பிரிப்பது மிகவும் கடினமாகும். மழை நீர் செம்மண்ணின் சிவப்பு நிறத்தில் காட்சியளிக்கும். செம்மண் ஓர் ஈரப்பதத்தை அடையும். அதை போல் தலைவருக்குள் தலைவியும், தலைவிக்குள் தலைவரும் இருப்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.



# "பிறவி பிழை, காதல் திருத்தம் நெஞ்சே"

என்பது வைரமுத்துவின் வரிகளாகும். அதாவது இதன் மூலம் அவர் கூறவருவது என்னவெனில் நமது பிறப்பே ஒரு பிழை என்றானால், அந்த முழு வாழ்வையும் நேர்வழிபடுத்தி அதற்கு ஓர் அர்த்தம் கொடுப்பது காதலாகும். நமது வாழ்க்கையையே மாற்றும் அளவிற்கு காதலின் பண்புகள் அமைந்துள்ளன. இந்த உணர்வினை பாடல்களின் வரிகளின் மூலம் புரிந்துகொள்ளவே இக்கட்டுரை முனைகிறது.

"கைகள் கோர்த்து பேசினாலே தைரியங்கள் தோன்றுமே ... நீ பேச பேச காயம் ஆறுமே," என்பது "கதைப்போமா" என்ற பாடலில் இடம்பெறும் வரிகள் ஆகும். இதன் மூலம் எழுத்தாளர் கூறவருவது என்னவெனில் வாழ்வில் நாம் பல கஷ்டங்களை சந்திக்கும்போது மனிதன் என்பவன் காதல் என்னும் உணர்வில் தான் தஞ்சம் அடைகிறான். இக்கருத்தை பகிர்ந்துகொள்ளும் வகையில் "Life of Pazham " என்ற பாடலில், "நீ வந்ததால், எதுவும் தூசாகுது // உன்னாலதான், மனசு லேசாகுது," என்ற வரிகளும் அமைந்துள்ளன. எப்படி ஓர் உறவின் ஆதரவால் மட்டும் நமது வாழ்வில் உள்ள அணைத்து சோகங்களையும் மறக்கமுடிகிறது? இதனால் தான் காதல் ஓர் அதிசயமான உணர்வாகவும் கருதப்படுகிறது. இதை சித்தரிக்கும் வகையில் "பூவுக்குள் ஒளிந்திருக்கும்" என்ற பாடலில், "கல்தோன்றி மண்தோன்றிக் கடல்தோன்றும் முன்னாலே உண்டான காதல் அதிசயம்," என்ற வரிகளும் அமைந்துள்ளன.



காதல் என்பது நமது சோகங்களுக்கு ஓர் அடைக்கலமாக அமைவது மட்டுமின்றி, நமது வாழ்க்கையையும் அழகாக்குகிறது. இக்கருத்தை வர்ணிக்கும் வகையில் "சுந்தரி" என்ற பாடலில் இடம்பெறும், "சோலையிலும் பூக்கள் பூக்கும் நான் உன் மார்பில் தூங்கினால்" என்ற வரிகள் அமைந்துள்ளன.



கண்பார்வையின்றி இருப்போர்கூட காதலெனும் உணர்வினால் இயற்கையின் அழகை ரசிக்க முடியும் என்று காட்டும் வகையில், "ஆகாசத்த" என்ற பாடலின் வரிகள் அமைந்துள்ளன. பாடலில் இடம்பெறும் கதாபாத்திரங்கள் கண்பார்வையற்றோராக இருந்தும் கதாநாயகி தமது காதலனோடு இருக்கும்போது, "ஆகாசத்த நான் பாக்குறேன், ஆறு கடல் நா பாக்குறேன்" என பாடுகிறார். ஆகையால், காதல் ஓர் மனிதனின் வாழ்வை மேன்மையாக்குகிறது.

“இந்த உலகம் தூளாய் உடைந்து போனாலும் அதன் ஒரு துகளில் உன்னைக் கரை சேர்ப்பேன்,” என்று "தாரமே தாரமே" என்ற பாட்டில் இடம்பெறும் வரிகளின் மூலம், இவ்வுலகமே அழிந்து போனாலும், காதலுக்கு என்றும் அழிவில்லை என்று நம்மால் அறிந்துகொள்ள முடிகின்றது. ஆகையால், காதலியுங்கள் நண்பர்களே!

-Kamalika




ANDY WARHOL
சிரித்து வாழ்ந்திடு

# சிரித்து வாழ்ந்திடு



சிரிப்பு
நம் மனகசப்பு
அனைத்தையும் விரட்டுகின்றது
வாய்விட்டு சிரித்தால்
பிணிவிட்டு போகுமாம்
பிணக்கையும் பிணைப்பாய் மாற்றிடும்
சிரிப்பெனும்
பொய்கையின் செய்கை

சிரிப்பு மனதின்
சிறைக்கதவுகளைத் திறந்துவிடுகின்றது
சிரிப்பே சிறையானால்
சொர்க்கமாகும் அல்லவா வாழ்க்கை

சிரிப்பே வாழ்வானால்
சிரமங்கள் இல்லை வாழ்க்கையில்- பிறகு
சிறப்பு ஏது வாழ்க்கைக்கு?

சிரிக்கக்கூடாது என்றாலும் திரௌபதியைத்
துகிலுரியும்போது
சிரித்து சிரித்து தன்னை இழந்தனர் கௌரவர்கள்
சீரிப் பாய்ந்து பீமன் அவர்களைத் தாக்கினான்

சிரிப்பால் மெய்ம்மறந்தோரும் உண்டு
சிரிப்பால் தன்னிலை மறந்தோரும் உண்டு
சிரிப்பால் தீங்கும் உண்டு
சிரிக்கத் தெரியாததாலும் தீங்கு உண்டு-
இருந்தாலும்,
சிரி! அது சிரமங்களின் சிரி (siri)

-Akash

# கவிதையின் அழகு



# கவிதையின் அழகு



கதிரவனைத் தேடிடும்
தாமரையான நான்
நிலவினில் அதைத்
தேடிட்டேன்

கண்ணீர் கடலில் நீந்தி
வாழ்ந்தேன்
கனாக்கள் ஆயிரம்
கண்டேன்
காற்றைப் போல உயர
உயர்ந்தேன்

நாற்ற மலர்கள்
குளிக்கும்போது
நானும் குளிர்ந்தேன்
சாரலில்

வானின் நாணம் வானவில்
மன்மதன் வில்லாய் எனைத்
தாக்கியது
மான்விழியொத்த
பெண்ணொருத்தி
கண்டதுபோல்
பிறந்தேன் ஒரு கவிஞனாய்...

நுனிநாக்கு பேசும் வார்த்தை
ஜாலமல்ல கவிதை- அது
ஆன்மா எழுதும் கதை

-Akash

# இலக்கியமும் வாழ்வின் வழிகாட்டியும்



# இலக்கியமும் வாழ்வின் வழிகாட்டியும்


‘அ’கரம், முதல் எழுத்தாகக் கொண்ட தமிழ் மொழியின் இலக்கியம் ஈராயிரம் ஆண்டுகள் தொன்மை வாய்ந்ததாகும். எவ்வளவு நூற்றாண்டுகள் கடந்தாலும், இன்றளவும் வாசித்த மாத்திறத்திலேயே புரிந்துகொள்ளும் அளவு தமிழ் இலக்கியம், வேறு எந்த மொழியையும் விட, தனித்துவம் மிக்கதாகும்.

இல்லறம் மட்டுமன்றி ஆன்மீகத்திலும், வேதத்திற்கும் இணையான பாசுரங்களும், திருமுறை பதிகங்களும் கொண்டதே நமது தமிழ் இலக்கியம். இவ்வாறு விஞ்ஞானம் முதல் மெய்ஞானம் வரை யாவற்றையும் இதில் கற்றுணர முடியும் என்பதே நம் இலக்கியத்தின் தனிச்சிறப்பு.

பண்டைய காலத்தில், சங்க இலக்கியம் என்று தோன்றி, நீதி இலக்கியம், பக்தி இலக்கியம், உரை நூல்கள், புராண இலக்கியம், கட்டுரை, சிறுகதை, புதுக்கவிதை என்று பல்வேறு விதமான இலக்கியங்கள் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தோன்றின. காலத்தின் தேவைகளுக்கு ஏற்றவாறு மாற்றிக்கொண்டு தன் தனித்துவத்தையும் இழக்காத மொழியாக இருப்பதால் தமிழ்மொழி வாழும் மொழியாக இருந்து வருகிறது, என்றும் வாழும் மொழியாகவே இருக்கும்.

இந்த இலக்கியமெனும் கடல் நம் வாழ்க்கைக்கு என்றும் உறுதுணையாகவே இருந்து வருகிறது.

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்று கணியன் பூங்குன்றனார் பாடியுள்ளார். எல்லாரும் நம் மக்கள், எந்தவிதமான பேதத்தையும் பார்க்கக்கூடாது என்ற சகோதரத்துவ பண்பினை ஊட்டி வளர்க்க முனைந்தவர்கள் நம் முன்னோர்கள்.



அதே பாடலில் அவர் “தீதும் நன்றும் பிறர் தர வாரா” என்ற மற்றோரு உன்னத கருத்தையும் அவர் சொல்கிறார். இன்று மேற்கத்திய மக்களையும் வெகுவாகக் கவர்ந்துள்ள கர்மவினை (KARMA) என்ற சிந்தனையைப் பற்றி அவர் கூறியுள்ளார்.

ஒரு சாமானியன் முதல் நாடாளும் மன்னன் வரை உள்ள அனைவருக்கும் வழிகாட்டியாக அமைந்துள்ளது நமது உலகப்பொதுமறை நூலான திருக்குறள்.



மனிதனுக்கு மட்டுமன்றி இவ்வுலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் அத்தியாவசியத் தேவையான நீரின் முக்கியத்துவத்தைப் பற்றி வள்ளுவர் இவ்வாறு கூறுகிறார்:



குறள் 16: விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது

பொருள்: மேகத்திலிருந்து மழைத்துளி விழாது போனால், பசும்புல்லின் நுனியைக்கூட இங்கே காண்பது அரிதாகிவிடும்

குறள் 13: விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின் றுடற்றும் பசி

பொருள்: உரிய காலத்தே மழை பெய்யாது பொய்க்குமானால், கடல் சூழ்ந்த இப்பேருலகத்தில் வாழும் உயிர்களைப் பசி வருத்தும்



முற்காலத்து மன்னனோ இக்காலத்து ஆட்சியாளர்களோ எவருக்கும் பொருந்தும் வகையில் அவர்கள் எவ்வாறு சிறப்பாக நல்லாட்சி புரியவேண்டும் என்றும் திருக்குறளில் கூறியுள்ளனர்

குறள் 546: வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்

பொருள்: ஆட்சியாளருக்கு வெற்றி தருவது ஆயுதம் அன்று; அவரின் நேரிய ஆட்சியே; அதுவும் தவறான ஆட்சியாக இல்லாதிருக்க வேண்டும்.


குறள் 554: கூழுங் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு

பொருள்: மேல்வருவதை எண்ணாது, தவறாக ஆள்பவன் தன் செல்வத்தையும், செல்வம் தரும் குடிமக்களையும் சேர்ந்தே இழந்துவிடுவான்.

(பொருள் விளக்கம் - திரு. சாலமன் பாப்பையா அவர்கள்)

இதுபோன்றே நம் வாழ்வின் வழிகாட்டியாக எண்ணற்றவை தமிழ் இலக்கியத்தில் இருக்கின்றன. காலங்கள் மாறி வந்தாலும், வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை அறநெறிகள் மாறுவதில்லை. அந்த வகையிலே நம் இலக்கியங்களின் தேவை எந்தக் காலத்திலும் இருக்கும்.

-Leena Roopa








கல்லூரியுள்ள
உணவு
விமர்சனங்கள்

# கல்லூரியுள்ள உணவு விமர்சனங்கள்



தமிழர்களின் கலாச்சாரத்தில் உணவென்பது இன்றியமையாத ஒன்று. பொங்கலுக்கு வெண்பொங்கல், சர்க்கரை பொங்கல், தீபாவளிக்கு லட்டு, ஜாங்கிரி, முறுக்கு எனும் பலகாரங்கள், திருமணத்திற்கு வாழையிலையில் அறுசுவை உணவு என்று நம் பண்பாட்டில் ஆழமாக பதிந்திருப்பது உணவுதான். ஆகையால் நாம் பாடம் கற்கும் கல்லூரியிலும் என்னென்ன இந்திய கடைகளில் ருசியான உணவிருக்கின்றது என்று நாம் தெரிந்துகொள்ள வேண்டாமா?




## Taj Anandas

இந்த உணவகம் நம் பல்கலைக்கழகத்தில் மிகவும் பிரபலமானதாகும் . இந்தக் கடையின் உணவு அனைத்து மாணவர்களின் நாவிலிருந்து எச்சி ஊற செய்கிறது. மேலும் இந்த கடையின் சிறப்பு அவர்கள் செய்யும் வெகு மீல்ஸ் தான்.வீட்டு சாப்பாட்டுக்கு ஈடு இணையே இல்லை இருந்தாலும் அதையும் மிஞ்சும் அளவுக்கு உள்ளன. அதனால் ஹோஸ்டேலில் தங்கும் மாணவர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.

## Tamarind Hall Canteen



இந்த கடையின் சிறப்பு சாப்பாடு மட்டும் அல்ல அங்கு சமைக்கும் ஆட்களும். சமைப்பவர்கள் நட்போடு  பழகுவார்கள் இது நம் மனதிற்கு ஆறுதலாக இருக்கும். அது மட்டும் அல்லாமல் அவர்கள் சமைக்கும் பரோட்டா மிகவும் அற்புதமாக இருக்கும். மேலும் இவர் கடை 11 மணிக்கு வரைக்கும் திறந்திரும் , அதனால் ஹோஸ்டேலில் தங்கும் மாணவர்களுக்கு சப்பர்(supper) வாங்குவதற்கு சுலபமாக இருக்கும்.

# NTU *Canteen* B



இந்தியர்கள் மட்டுமில்லாமல் மலாய் மக்களுக்கும் சீனர்களுக்கும் மிகவும் பிரியமான உணவகமாக இந்த உணவகம் விளங்குகிறது. மக்களால் விரும்பப்பட்ட உணவுகள் அவர்களுடைய நாண், பரோட்டா, பிரியாணி, டோபு குச்சிகள் மற்றும் கோழி கெபாப்ஸ். சாதத்துடன் தரும் குழம்பு/கிரேவி மிக அதிக காரமில்லாமல் சுவையாக இருக்கும். அவர்களுடைய பரோட்டாவின் மகிமையே அதனுடைய மென்மையிலும், அடுக்குகளிலும் உள்ளது. இவ்வளவு எச்சில் ஊரும் உணவுகளை சுவைபார்க்கவே அவர்களின் பின் இருக்கும் கடை வரை வரிசை நிற்கும். காத்திருக்கும் வாடிக்கையாளர்களுக்கு மிக விரைவாக உணவை அளிப்பார்கள்.



நாவில் எச்சில் ஊரும் உணவுகளை வழங்கி மேல் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று உணவகங்களும் புகழ்பெற்றுள்ளன. இவை மட்டுமில்லாமல் நம் கல்லூரியில் ருசியான உணவு வழங்குகின்ற நிறைய இந்திய உணவகங்கள் இருக்கின்றன. ஆக, எதற்காக காத்திருக்கிறீர்கள்? இப்போதே உங்களுக்கு மிக அருகிலுள்ள இந்திய உணவகத்திற்கு சென்று வயிறும் மனமும் நிறையும்வரை உண்டு மகிழுங்கள்! இவ்வாறே நம் இந்திய கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் நம் கல்லூரியில் நாம் வாழ வைப்போம்!



-Monika and Jenifer

# Thanking our Sponsors

THANK YOU TO OUR SPONSOR!

Singapore Indian Chamber of Commerce & Industry

ESTABLISHED 1924

**Its Mission: to promote the spirit of entrepreneurship by providing opportunities to members to expand and grow in Singapore and abroad.**

**Its Vision: To serve as a connector, enabler and advocator for Indian businesses in Singapore.**

Established in 1924 and about to celebrate its centenary in 2024, the Singapore Indian Chamber of Commerce and Industry is the premier business association for Indian businesses in Singapore.

With over 600 members from all walks of trade and industry, SICCI is an advocator, connector, and enabler, helping companies grow locally and internationally. The Chamber offers its members an array of business support services, including trade matching, business advisory, networking sessions, seminars and training, and also serves as a champion of members' interests. SICCI aims to function as a gateway of opportunities for Indian businesses in Singapore, helping both home-grown and international companies realize their full potential. SICCI strives to provide its members with insight, connections, and support services to give their companies a competitive edge in the global market.

SICCI's role as a connector of Indian businesses to global opportunities has grown by leaps and bounds in the few years with the array of Memoranda of Understanding the Chamber has signed with leading Chambers and Business Associations in the ASEAN region and India.

But it is not just business alone at the forefront of SICCI's work.

SICCI has also had several roadshows to bring on board new members, especially those of the younger generation, to connect and interact with Indian business leaders, government Ministers and officials, providing them with a platform to share their thoughts and views on business.

The current Board of Management of the Singapore Indian Chamber of Commerce and Industry is chaired by Mr Neil Parekh

# Credits

## CONTENT:

AKASH
NESHIHA
SHIVANI
NIVETHA
YASOTHAI
KAMALIKA
LEENA
MONIKA
CHANDRU
RANITHA
NANDINI
SAHANA
JENIFER

## DESIGN:

MAITIYILI
ASHWINI
NACHAMMAI
SENCHIA
JENIFER
RISHIKA
ZAREEN
SANJANA
KIRTHIKA
SRI VAISHNAVI

## SPECIAL THANKS:

MEDIA COMMITTEE (PHOTOSHOOT/ VIDEOS)

WELOGS COMMITTEE (EVENTS)

PUBLICATIONS COMMITTEE (CONTENT)

DESIGN COMMITTEE (DESIGN CONTENT)

CULTURAL AFFAIRS COMMITTEE (WINGS)

BUSINESS COMMITTEE (SPONSORSHIPS)

தமிழ் இலக்கிய மன்றம்
NTU TLS

தமிழ் இலக்கிய மன்றம்

# NTU TLS

# சாரல்

2022/23 EDITION 1



ஆதி உண்டு, அந்தம் இல்லை!

தமிழன் மூச்சு இருக்கும் வரை!